சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.99/2024</u>

03.03.2026

வா.சா.1 திருமதி. சுமதி, க/பெ. சுந்தர்ராஜன்

**முதலாம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது பெற்றோர்களுக்கு நாங்கள் மூன்று பெண்குழந்தைகள் என்றால் சரிதான். ஆண்வாரிசு இல்லை என்றால் சரிதான். நான் கடந்த 35 வருடங்களாக ராணிப்பேட்டை மாவட்டம், வடபால் கிராமத்தில் வசித்து வருகிறோம். எனக்கு சொந்த ஊர் பரவாக்கரையாகும். எனது சகோதரர்களான பிரதிவாதிகளில் அமுதா பரவாக்ககைரையிலும், ஜெயந்தி ஒசுரிலும் வசித்து வருகிறார்கள். எனது தாய் தகப்பனார் இறக்கும் வரை பரவாக்கரை கிராமத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். நானும் எனது சகோதரி ஜெயந்தியும் வெளியூர் சென்றுவிட்டதால் என் பெற்றோருக்கு உதவியாக அமுதா மட்டுமே உதவியாக இருந்தார் என்றால் சரியல்ல. ஒவ்வொரு மாதம் ஒரு வீட்டில் இருப்பார். தாவா சொத்துள்ள கிராமம் பரவாக்கரை. தாவா சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. பரமேஸ்வரன் அமுதாவின் மகன் ஆவார். பரமேஸ்வரன்தான் எனது தாய் தகப்பனாரை கடைசி காலத்தில் பராமரித்தார் என்றால் சரியல்ல. நாஙகள் மூவரும்தான் பராமரித்தோம். எனது தகப்பனாருக்கு புற்றுநோய் வந்தது என்றாலும் அவரின் மருத்துவ சிகிச்சையை 1 ஆம் பிரதிவாதிதான் பார்த்துவந்தார் என்றால் சரியல்ல. மருத்துவ சிகிச்சைக்காக ரூ.5,00,000/- செலவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் பரமேஸ்வரன் தான் எங்கள் சொத்துக்களை அனுபவம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஆர்சிசி கட்டிடமும், அதோடு இணைந்த காலிமனையும் சேர்த்து எனது தகப்பனார் அவரது பொறுப்பில் வைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த சொத்தை எனது தகப்பனார் பரமேஸ்வரனுக்கு உயில் மூலம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. உயில் சொத்து போக மீதமுள்ள நிலங்களை நானும் எனது சகோதரிகளும் பிரித்துக்கொள்வோம் என பேசினோம் என்றால் சரியல்ல. தாவா சொத்திலுள்ள ஆர்சிசி கட்டிடமும், காலிமனையும் புல எண்கள்.110/30, 110/33, 110/34, 110/39, 110/40, 99/1 ல் உள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் நல்ல நிலையில் இருந்த போது தான் பரமேஸ்வரனுக்கு உயில்

எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. உயில் எழுதிவைத்த விவரம் எனக்கும் எனது கணவருக்கும் மற்ற சகோதரிகளுக்கும் நன்கு தெரியும் என்றாலும் தற்போது உயிலை மறைத்து தாவா சொத்துக்கும் பாகம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 10.06.2015 ல் எனது தகப்பனார் பரமேஸ்வரனுக்கு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் பிராதில் சொல்லியுள்ளவாறு சமரசம் பேசி எனக்கு சமரச படி ரூ.3,00,000/- தொகை கொடுப்பார்கள் என சொல்லியுள்ளது உண்மைதான். நாங்கள் சமரசம் பேசியபோது எனது தகப்பனார் எழுதிவைத்த உயில்படி அதில் கண்ட சொத்தை பரமேஸ்வரன் அனுபவித்து கொள்ளலாம் என்று சொன்னோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எழுதிவைத்த உயிலின் படி தான் 1/3 பங்கு பாகம் கொடுக்க பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

**இரண்டாம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.